மாலை மலர் (24.12.2019)

# தமிழ்நாடு செய்தித்தாள்நிறுவனம் சார்பில் ரத்ததான முகாம்

வேலாயுதம்பாளையம், டிச.24—

தமிழ்நாடு செய்தித்தாள் காகிதநிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் ரத்த தான முகாம் காகித நிறுவனத்தின் சமுதாயக் கூடத்தில் நடந்தது.

காகித நிறுவனத்தின் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவ அலுவலர் வசந்தி ஆகியோர் முகாமை தொடங்கி வைத்து, ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்களை அளித்தனர்.

முகாமில் நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் ரத்த தானம் செய்து, மற்றவர்களையும் ஊக்குவித்தார். முகாமில் ஆலைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர். முகாமில் மொத்தம் 178 நபர்கள் பங்கேற்று ரத்த தானம் செய்தனர். ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சான்றிதழ்கள் வழங்கப் பட்டது.




ரத்த தான முகாமில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவ அலுவலர் வசந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.